வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : சரவணகுமார்

தேதி : 20.06.2026 – சனிக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

<u>*தலைப்புச் செய்திகள்*</u>

- பிரதமர் திரு. நரேந்திர மோடி, ஒடிசா மாநிலத்தில் மயூர் பஞ்ச் மாவட்டத்தில் இன்று 47 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை தொடங்கி வைத்து அடிக்கல் நாட்டினார்.
- குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்முவின் பிறந்த தினத்தை முன்னிட்டு, குடியரசு துணைத் தலைவர், பிரதமர், உள்துறை அமைச்சர் உள்ளிட்டோர் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.
- இந்தியாவில் முதலீடு செய்ய உலக நாடுகள் முன்வர வேண்டும் என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
- 12ஆவது சர்வதேச யோகா தினம், நாளை உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது.
- மருத்துவம், பல் மருத்துவ படிப்பிற்கான நுழைவுத் தேர்வு நாளை நடைபெறும் என்று தேசிய தேர்வு முகமை அறிவித்துள்ளது.

<u>*மோடி – ஒடிசா (7)*</u>

பிரதமர் திரு. நரேந்திர மோடி, இன்று மாலை, ஒடிசாவில் 47 ஆயிரத்து 600 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும் வளர்ச்சித் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார். ஒடிசா மாநிலம் மயூர்பஞ்ச் மாவட்டத்தில் உள்ள பஹாத்பூர் கிராமத்தில் நடைபெறும் இந்நிகழ்ச்சியில், குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்முவும் பங்கேற்கிறார். இந்நிகழ்ச்சியின்போது, எரிசக்தி, தொழில்துறை, உள்கட்டமைப்பு, சாலை

இணைப்பு வசதிகள், குடிநீர், சுகாதாரம், கல்வி உள்ளிட்ட பல்வேறு துறை திட்டங்களையும் பிரதமர் தொடங்கி வைக்கிறார்.

*முர்மு – பிறந்த நாள் -1 (19)*

குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்முவின் 68ஆவது பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி, அவருக்கு குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு. நரேந்திர மோடி, மற்றும் உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா உள்ளிட்டோர், அவருக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளனர்.

குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்மு, நலிந்த மக்களின் நலனுக்காக தொடர்ந்து குரல் கொடுத்து, தேச சேவைக்கு தன்னை அர்ப்பணித்து உள்ளதாகத் தெரிவித்துள்ளார். அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி, மற்றும், சமூக நலனுக்கான அவரது குறிப்பிடத்தக்க அர்ப்பணிப்பு, நாடு முழுவதும் உள்ள மக்களுக்கு தொடர்ந்து உத்வேகம் அளிக்கிறது என்றும் அவர் கூறியுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி விடுத்துள்ள சமூக ஊடகப் பதிவு ஒன்றில், தைரியம், எளிமை, பணிவு, மற்றும், பொதுச்சேவைக்கான அசைக்க முடியாத அர்ப்பணிப்பு ஆகியவற்றால் குறிக்கப்பட்ட குடியரசுத் தலைவரின் பயணம் நாடு முழுவதும் உள்ள மக்களுக்கு உத்வேகம் அளிப்பதாக தெரிவித்துள்ளார். தனது பொது வாழ்க்கை காலத்தில், குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்மு. தேசத்திற்கு மிகச் சிறப்பாக பணியாற்றி உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். சமுதாயத்தில் நலிந்த மற்றும் விளிம்புநிலை மக்களின் நலனுக்காக தன்னை அவர்,

*முர்மு – பிறந்த நாள் – 2 (12)*

அர்ப்பணித்துள்ளார் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார். இந்தியாவின் வளர்ச்சிக்கான அவரது அசைக்க முடியாத அர்ப்பணிப்பு மிகவும் ஊக்கமளிப்பதாக அவர் தெரிவித்துள்ளார். குடியரசுத் தலைவர் திருமதி. முர்மு, தேச சேவையில் நீண்ட மற்றும் ஆரோக்கியமான வாழ்வை வாழ, திரு. நரேந்திர மோடி வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

திருமதி. திரவுபதி முர்முவின் பிறந்த தினத்தை முன்னிட்டு, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா விடுத்துள்ள சமூக ஊடகப் பதிவில், அவரது பதவிக் காலத்தில், பெண்களின் கவுரவம், பொதுநலன், மற்றும், தேசிய சேவை ஆகிய துறைகளில், நாடு எண்ணற்ற சாதனைகளை படைத்துள்ளது என்றும் கூறியுள்ளார். போராட்டம், அர்ப்பணிப்பு மற்றும் தேச பக்தி நிறைந்த அவரது வாழ்க்கை பெண்களின் வலிமைக்கும், இளைஞர்களுக்கும், அனைத்து குடிமக்களுக்கும் ஒரு உத்வேகத்தை ஊற்றாக விளைவிக்கிறது என்று கூறினார்.

*மோடி – உலக நாடுகள் முதலீடு -1 (2)*

இந்தியாவில் முதலீடு செய்வதற்கு, உலக நாடுகள் ஆர்வம் காட்டி வருவதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி, தெரிவித்துள்ளார்.

*மோடி – உலக நாடுகள் முதலீடு -2 (15)*

பிரதமர் திரு. நரேந்திர மோடி , பிரான்ஸ் நாட்டிற்கு அண்மையில் சுற்றுப் பயணம் மேற்கொண்டார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில், முதலீடுகளுக்கு உகந்த நாடாக இந்தியா உருவாகி வருவதாக தெரிவித்துள்ளார். உலகின் மிகப் பெரிய மக்கள் தொகை கொண்ட நாடாக இந்தியா இருந்தபோதிலும், உலக நாடுகள் இந்தியா மீது மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார். வளர்ச்சி அடைந்த இந்தியாவிற்கான வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், 2 ஆயிரத்து 400 கோடி ரூபாய் ஊக்கத் தொகையை பிரதமர் விடுவித்தார்.

புதுடெல்லியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில், இத்திட்டத்தை தொடக்கி வைத்த பிரதமர், இளைஞர்களுடனும் கலந்துரையாடினார். தொடர்ந்து நிகழ்ச்சியில் பேசிய பிரதமர், நாடு முழுவதும் தற்போது ஒவ்வொரு மாவட்டத்திலும் புத்தொளி நிறுவனங்கள் செயல்பட்டு வருவதாகவும் தெரிவித்தார். இந்திய இளைஞர்கள் புதிய கண்டுபிடிப்புகள் மூலம் தொழில் முனைவோர்களை வழிநடத்துவார்கள் என சர்வதேச சமூகம் நம்பிக்கையுடன் உள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

*யோகா -1 (17)*

12ஆவது சர்வதேச யோகா தினம் நாளை உலக அளவில் கொண்டாடப்பட உள்ளது. ஆரோக்கியமான முதுமைக்கான யோகா என்ற கருப்பொருளுடன், இந்த ஆண்டு யோகா தினம் கொண்டாடப்படுகிறது. இது அனைத்து வயதினருக்கும் யோகா என்ற முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. இந்த யோகா கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக, இந்தியாவின் வளமான பாரம்பரியத்தையும், மரபுகளையும் ஒன்றிணைக்கும் வகையில், மத்திய கலாச்சார அமைச்சகம் நாடு முழுவதும் உள்ள 100 முக்கிய இடங்களில் சிறப்பு சர்வதேச யோகா தின நிகழ்ச்சிகளை நடத்த உள்ளது. புதுடெல்லியில் உள்ள அகில இந்திய ஆயுர்வேத நிறுவனம் நாளை நடைபெற இருக்கும் கொண்டாட்டங்களுக்கு முன்னதாக, யோகாவுக்கான ஓட்டம் மற்றும் ஒரு சிறப்பு நிகழ்ச்சியையும் ஏற்பாடு செய்துள்ளது. இந்த நிகழ்ச்சி யோகாவை அன்றாட வாழ்வில், இணைத்துக் கொள்வதற்கான முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. இந்த நிறுவனத்தின் இயக்குநர் பேராசிரியர் பிரதீப் குமார் செய்தியாளர்களிடம் பேசுகையில், ஆண்டு முழுவதும் யோகப் பயிற்சியை தவறாமல் மேற்கொள்ள வேண்டும் என்றும், சுயமாக உருவாக்கப்பட்ட ஆசனங்கள் மூலம் தினமும் யோகா பயிற்சி செய்வதன் அவசியத்தை உணர்த்த முடியும் என்றும் கூறினார்.

*யோகா -2 (20)*

சர்வதேச யோகா தினத்தின் பிரதான தேசிய கொண்டாட்டம், பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தலைமையில், நாளை கொல்கத்தாவின் வரலாற்றுச் சிறப்புமிக்க ரெட் ரோட்டில் நடைபெற உள்ளது. இந்திய கலாச்சார உறவுகள் மற்றும் வெளிநாடுகளில் உள்ள இந்தியத் தூதரகங்களின் ஒருங்கிணைந்த முயற்சிகள் மூலம், இந்த ஆண்டு யோகா தினக் கொண்டாட்டம் உலகம முழுவதும் சுமார் 2 ஆயிரத்து 500 இடங்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இதில் 210க்கும் மேற்பட்ட இந்தியத் தூதரகங்கள் பங்கேற்க உள்ளன.

மத்திய பிரதேச மாநிலம் ஜபல்பூரில் நடைபெறும் சர்வதேச யோகா தின நிகழ்ச்சியில், குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்மு, தலைமை விருந்தினராக கலந்து கொள்வார் என, தெரிவிக்கப்பட்டுள்ளது. யோகா தின நிகழ்ச்சிக்குப் பிறகு, குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்மு, ராணி துர்காவதி பல்கலைக்கழகத்திற்குச் செல்ல உள்ளார். அங்கு அவர், அப்பல்கலைக் கழகத்தின் 36ஆவது பட்டமளிப்பு விழாவில், சிறப்பு விருந்தினராக பங்கேற்க உள்ளார். மத்திய பிரதேச ஆளுநர் திரு. பட்டேலும், இந்த விழாவில் கலந்து கொள்கிறார். நிகழ்ச்சியைத் தொடர்ந்து, குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்மு, குனோ தேசிய பூங்காவிற்குச் செல்ல உள்ளார். அங்கு அவர் சஹாரியா பழங்குடியினர் சமூகத்தினர், சிறுத்தைகளை கண்காணிப்பவர்கள், மற்றும், பூங்காவின் களப் பணியாளர்கள் உள்ளிட்டோரைச் சந்தித்து உரையாடுகிறார்.

*மோடி – கடற்படை (7)*

பிரதமர் திரு. நரேந்திர மோடி, நாளை கொல்கத்தாவில், முற்றிலும் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட 3 இந்திய கடற்படை போர்க் கப்பல்களான, ஐ.என்.எஸ் துனகிரி, ஐ.என்.எஸ் சன்ஷோதக் மற்றும் ஐ.என்.எஸ் அக்ரே ஆகியவற்றை தொடங்கி வைக்க உள்ளார். இந்த கப்பல்களில் 75 சதவிகிதத்திற்கும் அதிகமான உள்நாட்டு தயாரிப்புகளே பயன்படுத்தப்பட்டு உள்ளன. இதில் 200க்கும் மேற்பட்ட சிறு, குறு மற்றும்

நடுத்தர நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன என்று கடற்படைத் தெரிவித்துள்ளது.

*காவிரி மேலாண்மை -1 (3)*

தலைநகர் டெல்லியில் வருகின்ற 23ஆம் தேதி செவ்வாய்க்கிழமை, காவேரி மேலாண்மை ஆணையத்தின் கூட்டம் நடைபெறும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

*காவிரி மேலாண்மை - 2 (10)*

(வாய்ஸ்)

காவிரி நதி நீர் பங்கீடு, கர்நாடகம், தமிழ்நாடு, கேரளம், மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்திற்கு சுமூக தீர்வு காண்பதற்காக உச்சநீதிமன்றத்தின் வழிகாட்டுதலின்படி, காவிரி மேலாண்மை ஆணையத்தால் அமைக்கப்பட்டதாகும். இந்த அமைப்பின் 52ஆவது கூட்டம் வருகின்ற செவ்வாய்க்கிழமை புதுடெல்லியில் நடைபெற உள்ளது. இந்த ஆணையத்தின் தலைவர் திரு. S.K. ஹல்தார் தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்திற்கு, 3 மாநிலங்கள் மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் பிரதிநிதிகள் பங்கேற்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இக்கூட்டத்தில், மேகதாது அணை விவகாரத்தில் முக்கிய ஆலோசனை நடத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

*நீட் தேர்வு (9)*

மருத்துவம், பல் மருத்துவம் உள்ளிட்ட இளநிலை மருத்துவ படிப்புகளுக்கான நுழைவுத் தேர்வான நீட் தேர்வு, நாடு முழுவதும் நாளை நடைபெற உள்ளது. இதில் புதுச்சேரியில் 4 ஆயிரத்து 324 பேர் தேர்வு எழுத உள்ளனர். புதுச்சேரியில் நாளை 9 தேர்வு மையங்களில் தேர்வு நடைபெற உள்ளது. நாளை மதியம் 2 மணி முதல் மாலை 5.15 மணி வரை

தேர்வு நடைபெற உள்ளது. நீட் தேர்வினையொட்டி, மொபைல் போன்கள், ப்ளூ டூத் கருவிகள், இயர் போன்கள், மைக்ரோ போன்கள், பேஜர்கள், கால்குலேட்டர்கள், ஸ்மார்ட் வாட்சுகள் போன்ற மின் சாதனங்களை கொண்டு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

*யோகா – புதுச்சேரி (11)*

புதுச்சேரியில், சுற்றுலாத்துறையின் சார்பில், 12ஆவது சர்வதேச யோகா தினவிழா நாளை கடற்கரை காந்தி திடலில் நடைபெற உள்ளது. காலை 7 மணிக்கு நடைபெறும் இந்நிகழ்ச்சியில், சிறப்பு விருந்தினராக துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு. ரங்கசாமி, சட்டப்பேரவைத் தலைவர் திரு. அன்பழகன், நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் திரு. செல்வ கணபதி, நாடாளுமன்ற மக்களவை உறுப்பினர் திரு. வைத்திலிங்கம், சட்டமன்ற உறுப்பினர் திரு. விக்னேஷ் கண்ணன், தலைமைச் செயலர் திரு. சரத் சவுகான், மாநில வளர்ச்சித்துறை ஆணையர் திரு. கிருஷ்ண மோகன் உப்பு, சுற்றுலாத்துறை ஆணையர் டாக்டர் மணிகண்டன், உயர்கல்வித் துறைச் செயலர் திரு. முகமது அசன் அபித், சுகாதாரத்துறை செயலர் திரு. சவுத்ரி முகமது யாசின் உள்ளிட்டோர் பங்கேற்க உள்ளனர்.

*யோகா – புதுச்சேரி (15)*

பிரதமர் திரு. நரேந்திர மோடி தொடர்ந்து 12 ஆண்டுகள் பதவி காலத்தை நிறைவு செய்ததையொட்டி, புதுச்சேரியில், கடற்கரை சாலையில் அமைந்துள்ள பிரெஞ்ச் பள்ளியான பான்சியோனா பிரண்ட்ஷிப் பள்ளியில் இருந்து பிரகதி பாதயாத்திரை இன்று நடைபெற்றது. இந்த பாதயாத்திரை தாவரவியல் பூங்கா வரை நடைபெற்றது. நிகழ்ச்சியை புதுச்சேரி துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் தொடங்கி வைத்தார். இதில், சட்டப்பேரவைத் தலைவர் திரு. அன்பழகன், அமைச்சர்கள் திரு. நமச்சிவாயம்,

திரு. ராஜவேலு, தலைமைச் செயலர் திரு. சரத் சவுகான், அரசுச் செயலர் டாக்டர் முத்தம்மா, திரு. கேசவன், முகமது யாசின் மற்றும் உள்ளாட்சித் துறை இயக்குநர் உள்ளிட்டோர் பங்கேற்றனர். இதேபோல் காரைக்காலிலும், பொதுப்பணித்துறை மற்றும் உள்ளாட்சித்துறை சார்பில் ஜன் விகாஸ் யாத்திரை இன்று நடைபெற்றது. இதில், அமைச்சர் திரு. ராஜசேகரன், சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் விக்னேஷ்வரன், மாவட்ட ஆட்சியர் இஷிதா ராட்டி, மற்றும் துணை ஆட்சியர் ஆகியோர் பங்கேற்றனர்.

***மாண்டவி□ா (12)***

இந்தியா கடந்த 12 ஆண்டுகளில் உலகின் மிகவும் வேகமான பொருளாதார வளர்ச்சி அடையும் நாடாக உருவெடுத்து வருவதாக, மத்திய அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார். ஆங்கில நாளேடு ஒன்றில் அவர் எழுதி இருக்கும் கட்டுரையில், பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசின் நல்லாட்சி, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி, அதிகாரம் அளித்தல், போன்ற காரணங்களால், இந்தியா வேகமான வளர்ச்சிப் பாதையை நோக்கி வருவதாக, அவர் தெரிவித்துள்ளார். இந்த வளர்ச்சியில் இந்திய இளைஞர்களின் பங்கு குறிப்பிடத்தக்கது என்று அவர் தெரிவித்துள்ளார். இந்தியாவில் தயாரிப்போம், டிஜிட்டல் இந்தியா, ஸ்டார்ட் அப், பிரதமரின் முத்ரா திட்டம் போன்ற திட்டங்களால், இந்தியா பல்வேறு மாற்றங்களை அடைந்து இருப்பதாகவும், இதன் மூலம் வேலைவாய்ப்புகள் அதிகரித்து இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

*குடி□ரசு துணைத் தலைவர் (9)*

குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி ராதாகிருஷ்ணன், 3 நாள் பயணமாக, லடாக் சென்றுள்ளார். தமது இந்தப் பயணத்தின்போது. லடாக்கில் நாளை நடைபெறும் சர்வதேச யோகா தின கொண்டாட்டங்களில் குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி ராதாகிருஷ்ணன், பங்கேற்கிறார்.

இதற்கிடையே இன்று லடாக்கில், உள்ளூர் மகளிர் சுய உதவிக் குழுவினருடன் அவர் கலந்துரையாடுகிறார். எல்லையோர பகுதிகளில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை அவர் ஆய்வு செய்கிறார். மேலும், போர் நினைவுச் சின்னத்திலும் அவர் மரியாதை செலுத்துகிறார்.

*மோடி – ே□ாகா – மேற்கு வங்கம் -1 (16)*

பிரதமர் திரு. நரேந்திர மோடி, நாளை, 2 நாள் பயணமாக மேற்கு வங்க மாநிலத்திற்குச் செல்ல உள்ளார். நாளை காலை கொல்கத்தாவில் நடைபெறும் சர்வதேச யோகா தின கொண்டாட்டங்களிலும் பிரதமர் பங்கேற்க உள்ளார்.

சுமார் 590 கோடி ரூபாய் மதிப்பிலான ரயில்வே திட்டங்கள், ஹவுராவில், 300 படுக்கைகள் கொண்ட புதிய ரயில்வே மருத்துவமனை, கிழக்கு மிட்னாபூரில் ஒரு ரயில் மேம்பாலம் உள்ளிட்ட பல வளர்ச்சித் திட்டங்களுக்கும் அவர் அடிக்கல் நாட்டுகிறார்.

மேலும், பிரதான் மந்திரி கிராம சதக் யோஜனா திட்டத்தின் கீழ், 315 கிலோ மீட்டருக்கும் அதிகமான தூரத்தை உள்ளடக்கிய, 49 கிராமப்புற சாலைத் திட்டங்களையும் அவர் தொடங்கி வைக்க உள்ளார்.

நிகழ்ச்சியில் அவர் வேளாண்துறையில் சுமார் 50 லட்சம் விவசாயிகளுக்கு காப்பீட்டு வசதியை வழங்கும் நோக்கில் பிரதான் மந்திரி ஃபைசல் பீமா யோஜனா திட்டத்தை முறைப்படி அறிமுகப்படுத்துகிறார்.

நிகழ்ச்சியைத் தொடர்ந்து, பிஎம் கிஸான் திட்டத்தின் கீழ், நாடு முழுவதும் 9.4 கோடிக்கும் அதிகமான விவசாயிகளின் வங்கிக் கணக்கில், 18 ஆயிரத்து 880 கோடி ரூபாய்க்கும் அதிகமான தொகையை செலுத்துகிறார்.

*__மோடி – தோகா – மேற்கு வங்கம் - 2 (6)__*

இதில், மேற்குவங்க மாநிலத்தில், 45 லட்சத்திற்கும் அதிகமான விவசாயிகளுக்கு 900 கோடி ரூபாய்க்கும் அதிகமானத் தொகை வழங்கப்பட உள்ளது. மீன்வளம் மற்றும் கால்நடை வளர்ப்புத் துறையில், ஒரு நவீன மீன்பிடி துறைமுகத்தையும், பீர்பூமியில் ஒரு மீன் சந்தையையும், நாடியாவில், கிழக்கு இந்தியாவின் முதல் ஆட்டு விந்து ஆராய்ச்சி ஆய்வகத்தையும் அவர் தொடங்கி வைக்கிறார்.

*__காசநோய் (13)__*

காசநோய் இல்லாத பாரதத்தை உருவாக்க அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுடன், மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் திரு. J.P. நட்டா, நேற்று ஒரு உயர்மட்டக் கூட்டத்தை நடத்தினார். தீவிர 100 நாள் காசநோய் தடுப்பு இயக்கத்தின் 2ஆம் கட்டம், வரும் ஜூலை முதல் வாரத்தில் நிறைவடைய உள்ளது என்றும் அவர் தெரிவித்தார். இதில், விடுபட்ட ஒவ்வொரு காசநோய் பாதிப்பையும் கண்டறிந்து, தீவிர சிகிச்சை அளிப்பதற்கு முக்கியமான முயற்சி என்றும் திரு. நட்டா தெரிவித்தார். கடந்த 2014ஆம் ஆண்டில் ஒரு லட்சம் பேரில் 243ஆக இருந்த காசநோய் பாதிப்பு, 2024இல் ஒரு லட்சம் பேரில், 187ஆக குறைந்துள்ளதாக அவர் தெரிவித்தார். மேலும் காசநோயால் ஏற்படும் இறப்பு விகிதமும் கணிசமாக குறைந்து உள்ளது என்றும், இது, கடந்த 2014ஆம் ஆண்டில் ஒரு லட்சம் பேருக்கு 34 ஆக இருந்த இறப்பு விகிதம், 2024இல் 21ஆக குறைந்துள்ளது என்றும் கூறினார்.

***<u>அமெரிக்க அதிபர் (12)</u>***

உலக அரங்கில் செல்வாக்கு மற்றும் சிறந்த ஆளுமை மிக்க தலைவராக பிரதமர் திரு. நரேந்திர மோடி விளங்கி வருவதாக, அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் டிரம்ப் பாராட்டுத் தெரிவித்துள்ளார். வாஷிங்டன்னில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றிய அவர், உலக அரங்கில் சிறந்த ஆளுமைமிக்க தலைவர் திரு. நரேந்திர மோடி என புகழாரம் சூட்டினார். அவர் 150 கோடி மக்கள் தொகை கொண்ட ஒரு நாட்டை வழிநடத்துகிறார் என்றும், கூறினார். பரபரப்பான அரசியல் சூழலுக்கு மத்தியிலும், திரு. நரேந்திர மோடி, அதிகாரத்தில் உள்ளதாக அவர் சுட்டிக் காட்டினார். திரு. மோடி, அமைதியான மற்றும் உறுதியான தலைவர் என அவர் பாராட்டினார். இந்தியா – அமெரிக்கா நாடுகளுக்கு இடையே பொருளாதார உறவுகள் மேம்பட்டு உள்ளதாகவும், இந்தியாவுடன் அமெரிக்கா நிலையான வர்த்தகத்தை மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.